பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூடசுந்தரம், நாமக்கல் கவிஞர்

ஸ்ரீ பியாரிலால்ஜியால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

12 ] சென்னை—ஞாயிறு, ஜூன் 30, *1946*. [ விலை. அணா. 2

## ஒரு உரைகல்

*திரு. கானஷியாம் சிங் குப்தா எழுதுகிறார் :—*

"துர்க் முனிசிபல் சபையின் கீழ் வேலை பார்க்கும் தோட்டிகள் உள்பட சகல சிப்பந்திகளும் தங்களுக்குக் கிடைப்பதுபோல் மூன்று மடங்கு சம்பளம் வேண்டுமென்று கேட்ட கோரிக்கையை முனிசிபல் சபையார் நிராகரித்து விட்டதால் இம் மாதம் 7-ம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்தார்கள். முனிசிபல் சபையார் அந்தச் சிப்பந்திகளின் காரியக் கமிட்டியாரிடம் வேலைநிறுக்தத்தில் தோட்டிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டாம் என்று வேண்டிக் கொண்டார்கள். ஆனால் அந்த வேண்டுகோளைக் காரியக் கமிட்டியார் பொருட்படுத்தாதிருந்து விட்டார்கள். விஷயத்தைப் பட்சபாதமற்ற மத்தியஸ்துக்கு விடவும் சம்மதிக்கவில்லை. தோட்டிகளும் வேலை நிறுத்தம் செய்வது என்று செய்த முடிவு முனிசிபாலிட்டியாரை என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கும்படி செய்து விட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை. 7-ம் தேதி நடந்த பொதுக் கூட்டத்தில் முனிசிபல் சபைத் தலைவரும் காரியக் கமிட்டித் தலைவரும் தங்கள் வாதங்களைப் பொது ஜனங்களுக்கு விளக்கிச் சொன்னார்கள். நான் அந்தக் கூட்டத்துக்குப் போயிருந்தேன். சிப்பந்திகள் கட்சிக்கு அவ்வளவு பலமில்லை என்பதே என்னுடைய அபிப்பிராயம். அத்துடன் நான் யார் கட்சி சரி என்று ஆராயவும் விரும்பவில்லை. ஆயினும் அயலூரிலிருந்து தோட்டிகளைக் கூட்டி வந்து நிலைமையை அதிகக் கஷ்டமானதாகச் செய்து விடாமல் வேலை நிறுத்தம் தீரும் வரை ஜனங்களே தோட்டி வேலை செய்து வரவேண்டும் என்று கூறினேன். என்னுடைய யோசனையை ஏற்றுக் கொண்டார்கள். அயலூரிலிருந்து தோட்டிகள் வரவுமில்லை, தோட்டிகளைக் கூட்டி வருமாறு ஆள் அனுப்பவுமில்லை. ஜனங்களே தாம் நகரத்தைச் சுத்தம் செய்து வந்தார்கள். அதன் பயனாக வேலை நிறுத்தமானது நாலே நாளில் குலைந்து போய்விட்டது. வேலை நிறுத்தம் செய்தவர்கள் 5-வது நாளில்வேலைக்கு வந்து சேர்ந்தார்கள். அந்த நான்கு நாளிலும் எவ்வித அக்கிரமமும் நடைபெறவில்லை. எல்லாம் அமைதியாகவே இருந்து வந்தது.

வேலை நிறுத்தம் நின்றுவிட்ட விபரத்தை ஜனங்களுக்கு அறிவிப்பதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்தில் காரியக் கமிட்டியின் தலைவர் நானும் என் தோழர்களும் வேலை நிறுத்த சமயத்தில் தோட்டி வேலையை மேற்கொண்டது வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு ஹிம்சைசெய்த குற்றத்துக்கு ஆளாக்கும் என்று கூறினார். நாங்கள் அந்தப்படி நடக்காதிருந்தால் முனிசிபல் சபையார் அவர்களுடைய கோரிக்கைகளுக்கு இணங்கி வந்திருப்பார்களாம். நாங்கள் தலையிட்டதால் அவர்களுக்கு நஷ்டம் உண்டாகி விட்டதாம். அதனால் எங்கள் தலையீடு ஹிம்சையின்பாற்படுமாம். தங்களுடைய அபிப்பிராயம் யாது? நானும் என்னுடைய தோழர்களும் ஹிம்சை செய்து விட்டோமா? நாங்கள் செய்த காரியம் தவறானதா? எனக்கு வேலை நிறுத்தம் செய்தவர்களிடம் பகைமை கிடையாது என்பதைக்கூறிக் கொள்கின்றேன். நான் என்னாலியன்ற வரையில் அவர்களுக்குச் சேவை கூடச் செய்திருக்கிறேன். *1942*-ம் வருஷத்தில் நான் முனிசிபல் சபைத் தலைவனாக இருந்த சமயத்தில் முனிசிபல் பாடசாலையில் ஹரிஜனக் குழந்தைகளைச் சேர்த்துக் கொண்டதற்காக கஷ்டங்கள் அனுபவிக்கக் கூடச் செய்திருக்கிறேன்."

திரு. கானஷியாம்ஜி எழுப்பியுள்ள கேள்வி வெகு முக்கியமானதாகும். இப்போது தோட்டிகள் வேலை நிறுத்தம் தினசரிச் சம்பவமாக ஆகிக்கொண்டு வருகிறது. அது நம்முடைய சமுதாய மனச் சாட்சியை வாதுக்கு அழைப்பதாகவும் நம்முடைய சுயராஜ்யக் கோரிக்கை உண்மையானதா என்று பரிசோதிப்பதற்கான உரைகல்லாகவும் இருக்கிறது. சமீபத்தில் ஆமதாபாத் நகரத்தில் தோட்டிகள் வேலை நிறுத்தம் செய்தபோது அதேபோல அங்கும் ஜனங்கள் நடந்து கொண்டதைப் பற்றி திரு. கந்துபாய் தேசாய் எழுதியனுப்பியிருக்கிறார். நம்முடைய சமுதாய வாழ்க்கையிலும் முனிசிபல் வாழ்க்கையிலும் தோட்டிகள் ஜீவநாடி போன்ற ஸ்தானத்தை வகித்துக் கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கைச் சௌகரியங்களைச் செய்து கொடுப்பதிலும் வேலைக்கு நல்ல சாதனங்கள் வழங்குவதிலும் யாருக்கேனும் உதவி செய்வதானால் தோட்டிகளுக்குத்தான் முதன் முதலாகச் செய்ய வேண்டியதாகும். தோட்டிகளுக்குப் பரிகாரம் கிடைப்பதற்காக நேரடியான காரியத்தில் தோட்டிகளே இறங்குவதற்குப் பதிலாக ஜனங்களும் வரி கொடுப்போரும் இறங்குவதே கடனாகும்.

வேலை நிறுத்தம் செய்வோர் வேண்டும் கோரிக்கைகள் எல்லாம் எப்போதும் நியாயமாகவே இருக்கும் என்று சொல்லிவிட முடியாது. ஆதலால் சம்பளம் முதலிய விஷயங்களைப் பற்றிய தர்க்கங்களைப் பட்சபாதமற்ற மத்யஸ்தத்துக்கு விட மறுப்பது தவறாகும். மேற்கண்ட இரண்டு இடங்களிலும் ஜனங்கள் வேலை நிறுத்தம் செய்தவர்களைப் பணிய வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தோட்டிவேலையை மேற்கொண்டிருப்பார்களானால், அவர்களுடைய செயல் கண்டிக்கத் தக்கதேயாகும். ஆனால் வேலை நிறுத்தம் செய்தவர்கள் நியாயமில்லாத கோரிக்கைகளைச் சொல்லுவார்களானால் அவர்களை எதிர்க்க ஜனங்களுக்குப் பரிபூரணமான உரிமை உண்டு என்பதில் சந்தேகமில்லை.

வேலை நிறுத்தங்கள் இப்போது நின்றுவிட்ட போதிலும் நகரசுத்திப்பிரச்னைகளில் ஜனங்களுக்கு உண்டாயிருக்கும் அக்கறை இத்துடன் அவிந்துபோய் விடலாகாது. இந்த மாதிரி வேலை நிறுத்தங்கள் மறுபடியும் உண்டாவதற்கான காரணத்தை வேரோடு பிடுங்கி எறிந்துவிட வேண்டும். அநேக நகரங்களில்

தோட்டிகள் வசிக்கும் இடங்கள் மிக மிகக் கேவலமாக இருக்கின்றன. அந்த நிலைமை அரைக்கணங்கூட இல்லாமல் ஒழிந்துபோய் விடவேண்டும். நகர சுத்தி வேலையைச் சிறந்த முறையில் செய்வதற்குத் தோட்டிகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்கள் கல்வி கற்பதற்கும் வைத்தியம் செய்து கொள்வதற்கும் நல்ல பிரஜைகள் ஆவதற்கும் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். சம்பளம் போதுமானதாக இல்லாதிருந்தால் அதைக் கூட்டிக் கொடுக்க வேண்டும். சீர்திருத்தவாதிகள் நகர சுத்தி வேலை என்றால் என்ன என்பதை அனுபவம் மூலம் அறிந்திருப்பார்களாதலால் அவர்கள் குப்பையையும் மலத்தையும் எந்தவிதமாக அப்புறப்படுத்தினால் தோட்டி வேலை அசுத்தமானதாகக் கருதப்படாமலிருக்குமோ அந்த விதமாக அப்புறப்படுத்தும் மார்க்கத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். அவசரமாகச் செய்ய வேண்டிய இந்தச் சீர்திருத்தத்தை மறுபடியும் கிளர்ச்சி ஏற்படுமுன்னதாகவே செய்துவிடவேண்டும். அப்படிச் செய்யாதிருந்து விட்டால் இதுவரை செய்த நல்ல வேலை அனைத்தும் விழலுக்கிறைத்த நீராகப் போய்விடும்.

புது டில்லி, மோ. க. காந்தி.
23—6—46

## மனிதன் மனிதனுக்குச் செய்யும் அநியாயம்

காரணமின்றி ஏற்படும் துவேஷமும் மனிதன் மனிதனுக்குச் செய்யும் துரோகத்தை நியாயம் என்று காட்டுவதற்காக சட்டத்தை உபயோகிப்பதும் எவ்வளவு தூரம் நம்முடைய நாட்டில் காணப்படுகின்றன என்பதை நமக்குக் குத்திக் காட்டும் வண்ணம் நடந்துள்ள ஒரு காரியம் சமீபத்தில் பத்திரிகைகளில் காணப்பட்டது. ஜூன் மாதம் 10-ம் தேதி வெளியான "ஹிந்துப்" பத்திரிகையில் காணப்பட்ட கீழ்க்கண்ட விபரமே நான் கூறுவதைச் சரியென்று நிரூபித்து விடக்கூடியதாக இருக்கின்றது :—

"மதுரையில் ஹரிஜனங்களில் இருவர் செய்த காரியத்தால் பிறருடைய மனம் நொந்து போனதாகச் சொல்லி அவர்களுக்கு நான்கு மாதக் கடுங்காவற் தண்டனை கொடுக்கப்பட்ட விபரத்தைக் கூறி சட்ட சபை அங்கத்தினர் திரு. எ. வைத்தியநாத அய்யர் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை மூலம் தெரிவிக்கின்றார். அதில் அவர் ஹரிஜனங்கள் தீண்டாமை காரணமாக அனுபவிக்க வேண்டியதாக இருக்கும் கொடுமைகளைக் கவனிக்குமாறு பொது ஜனங்களை அழைக்கின்றார்.

திரு. வைத்தியநாத அய்யர் கூறுகிறார் :—மதுரையிலுள்ள ஹரிஜனர் ஒருவருடைய மூத்த குழந்தை இறந்து போய்விட்டது. அவர் அதைக் கொண்டு போய் முனிசிபல் சுடுகாட்டில் சுட்டார். அவர் சுட்ட இடம் ஹரிஜனங்களுக்காக ஏற்பட்ட இடமல்லவாம், சவர்ணர்களுக்கு ஏற்பட்ட இடமாம். அவர் தமக்கு அந்தவிஷயம் தெரியாதென்றும், தாம்சென்ற பொழுது மழை தூரிக் கொண்டிருந்தது என்றும் தாம் சுட்ட விடமே தகுந்த விடம் என்று கருதியதாகவும் கூறினார். அவர் சுட்ட சமயத்தில் சவர்ணர் யாரும் ஆட்சேபிக்கவில்லை. யாருடைய மனமும் புண்பட்டதாகச் சாட்சியமும் கிடையாது. மதுரைப் போலீஸார் அவரும் அவருக்குத் துணையாகச் சென்ற அவருடைய உறவினரும் தீண்டாதவர்களாயிருந்தபடியால் அவர்கள் செய்த காரியம் பிறருடைய மனத்தை நோகச் செய்வதாக இருப்பதாகக் கூறி வழக்குத் தொடுத்தார்கள். அதன்மேல் மாஜிஸ்டிரேட் வழக்கை விசாரணை செய்து அவர்கள் இருவரும் குற்றவாளிகள்தாம் என்று முடிவு செய்து தலைக்கு நான்கு மாதக் கடுங்காவல் தண்டனை அளித்தார். அவர்கள் அப்பீல் செய்தார்கள். ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தியுள்ள பொது ஸ்தலங்களுக்குப் போகக் கூடாது என்று ஹரிஜனங்களைத் தடுக்கக் கூடாது என்று 1938-ம் வருஷத்தில் சென்னை சட்ட சபையில் நிறைவேறியுள்ள சமூக சீர்திருத்தச் சட்டம் கூறுவதாகவும் ஹரிஜனங்களுக்குச் சமூக உரிமைகள் தர மறுக்கும் வழக்கங்களை கோர்ட்டுக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாதென்றும் விவாதிக்கப்பட்டது. ஆயினும் அப்பீல் கோர்ட்டார் கீழ் கோர்ட்டு தீர்ப்பையும் தண்டனையையும் ஊர்ஜிதமே செய்தார்." திரு. வைத்தியநாத அய்யர் இந்த விஷயத்தைத் தாம் சென்னை மந்திரி சபைக்குத் தெரிவித்திருப்பதாகவும் கூறுகிறார்.

மனித விரோதமான இந்த விஷயத்தில் சென்னை மந்திரி சபையார் செய்யவேண்டிய முதற் காரியம் மன்னிப்பதற்குள்ள தங்கள் அதிகாரத்தை உபயோகித்து அந்த இரண்டு பேரையும் விடுதலை செய்வதும் மேற்கொண்டு கோர்ட்டு மூலம் ஏதேனும் செய்யச் சட்டம் இடங் கொடுக்குமானால் சர்க்காரே வழக்கை ஹைக் கோர்ட்டுக்கு அனுப்பி மதுரைக் கோர்ட்டுத் தீர்ப்பை ரத்து செய்ய ஏற்பாடு செய்வதுமே யாகும்.

புது டில்லி மோ. க. காந்தி
23—6—46

## குஷ்டரோக நிவாரண வேலை

ஆசிரியர் டி. என். ஜகதீஸன் தென் ஆற்காடு ஜில்லாவில் நடந்து வரும் குஷ்டரோக நிவாரண வேலையைக் குறித்துக் கீழ்கண்ட அறிக்கையை அனுப்பியிருக்கிறார் :—

"மருந்து வாங்கிப் போவதற்காகப் பெண்களும் குழந்தைகளும் நாளுக்கு நாள் அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். சராசரி தினசரி வருபவர் தொகை 30 ஆகும். நோயாளிகளில் பலர் ஒழுங்காக வந்து கொண்டிருக்கிறார்கள். மருந்து குத்தி வைக்கும் நாட்களில் உணவும் கொடுப்பதா யிருந்தால் நோயாளிகள் ஒழுங்காக வருவதற்கு அனுகூலமாயிருக்கும் என்று யோசனை கூறப்படுகிறது. சில நோயாளிகளுக்கு குணம் தோன்றி யிருப்பதால் மற்ற நோயாளிகளும் ஒழுங்காக வந்து சிகிச்சை பெற்று கொள்வார்கள்என்று எண்ணுகிறேன். நோயாளிகளை ஒழுங்காக வரும்படி செய்வதற்காகப் பாதி நாட்களாவது ஒழுங்காக வருபவர்களுக்கு வருஷத்தில் இரண்டு முறை அதாவது தீபாவளிக்கும் பொங்கலுக்கும் துணி வாங்கிக் கொடுக்கவும் யோசனை செய்யப்பட்டு வருகிறது. நோயாளிகள் வெகு தூரத்திலிருந்து வெயிலில் நடந்துவர வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களை ஒழுங்காக வரச்செய்வதே முதலில் செய்ய வேண்டிய காரியமாக இருக்கின்றது. வாரத்தில் இரண்டுமுறை மருந்து குத்திவைக்கப் படுகிறது. ஆனால் ஒழுங்காக ஒரு முறை வந்தால்கூடப் போதும் என்று டாக்டர் கூறினார். நோயாளிகளில் பெரும்பாலோர் வாரம் ஒரு முறை கட்டாயமாக வரவே செய்கிறார்கள்.

மருந்து குத்திவையாத நாட்களில் டாக்டர் கிராமங்களில் குஷ்டம் எவ்வளவு பரவி யிருக்கிறது என்பதைக் குறித்து விசாரணை செய்துவருகிறார். குஷ்டரோகம் இருக்கிறதா என்று பரிசோதிக்க கிராமத்து ஜனங்கள் சம்மதிப்பதைப் பார்க்க ஆச்சரியமாயிருக்கிறது. கிராமவாசிகள் வயல்களுக்குப் போக வேண்டியவர்களாக இருப்பதால் டாக்டர் ஒரு வீட்டிலுள்ள மக்கள் அனைவரையும் பரிசோதிப்பதற்காக அந்த வீட்டுக்கே பலமுறை போகவேண்டியிருக்கின்றது. ஆயினும் நம்முடைய டாக்டர் ஆயிரம் பேர்க்கு 983 பேர் வீதம் பரிசோதித்திருப்பது உற்சாகம் தருவதாக இருக்கின்றது. இந்த

மாதிரி வீடு வீடாகச் சென்று பரிசோதனை செய்யும் முறையானது பிரசார விஷயத்திலும் கல்வி விஷயத்திலும் அதிகப் பலன் தருவதா யிருக்கின்றது. அதனால் நோயாளிகளும் பிறரும் குஷ்டரோகத்தின் பிரதமச் சின்னங்களை அறிந்துகொள்ள இடமுண்டாகிறது. அவர்கள் குஷ்டரோகத்தைப் பரவவொட்டாமல் தடுக்க வேண்டுமானால் குழந்தைகளைத்தான் பாதுகாக்கவேண்டும் என்பதையும் தெரிந்துகொள்கிறார்கள். எது அபாயகரமானது எது அபாயகரமானதன்று என்பதையும் நாளடைவில் உணர்ந்து கொள்ள ஆரம்பிக்கிறார்கள். ஒட்டுவா ரொட்டியாக வுள்ள நோயாளியை எப்படிக் குழந்தைகளுக்குத் தீங்கின்றி கிராமத்தில் வைத்துக்கொள்ளும் முறைகளைப் பற்றி டாக்டர் நோயாளிகளுக்கும் கிராமத்து ஜனங்களுக்கும் சொல்லிக் கொடுக்கிறார். ஆனால் நோயாளிகளைப் பிரித்துவைக்கும் முறையைக் கைக்கொள்ளும்படி கிராமவாசிகளைச் செய்வது ஆரம்பத்தில் சுலபமான காரியமன்று. கிராமத்தில் பிரித்து வைப்பதுதான் மனிதப் பண்புக்கு ஒத்ததும் அதிகச் செலவில்லாததுமான காரியமாகும். ஆனால் அந்த வேலையைச் செய்ய முழு நேரத்தையும் சேவையில் செய்யக்கூடிய ஊழியர்கள் தேவை. அத்தகையோர் சேவை செய்யத் தகுந்த காரியமே அது. நான் கடைசியாகக் கிராமத்துக்குச் சென்றபோது, நோயாளி ஒருவருடைய உறவினரை ஒட்டுவா ரொட்டியாக வந்துள்ள நோயுடைய தங்கள் உறவினரைப் பிரித்து வைப்பதற்காகத் தனியாக ஒரு குடிசையைத் தந்து உதவுமாறு செய்தேன். ஆனால் கண்டச்சிபுரத்து அம்பட்டர் ஒட்டுவாரொட்டி நோயுடையவராக இருந்தும் என்னுடைய யோசனையைக் கேளாமல் கிராமவாசிகளுக்கு க்ஷவரம் செய்துகொண்டே யிருக்கிறார். இதின் விசேஷம் என்னவென்றால் ஜனங்களும் அவரிடம் க்ஷவரம் செய்து கொள்வதுதான். அம்பட்டரைக் கூப்பிட்டுக் கேட்டால் அவர் "அதுசரிதான் சாமி, ஆனால் நானும் என் குடும்பமும் பிழைப்பது எப்படி? வேறு வழி காட்டுங்கள், விட்டுவிடுகிறேன்" என்று கூறுகிறார். அவரைச் (செங்கற்பட்டிலுள்ள லேடி வின்லிக்கோ குஷ்டரோக ஆஸ்பத்திரியில்) சேர்த்துக்கொள்ளும்படி செய்ய நான் சிரமப்பட்டேன். ஆனால் அவர் தம்முடைய மனைவியையும் கூட்டிப் போகலாம் என்றால்தான் அங்கே போவாராம். ஆனாலும் எப்படியும் அவரை அங்கே கொண்டு போய்ச் சேர்த்துவிடலாம் என்றே நம்பிக் கொண்டிருக்கிறேன். டாக்டரும் நானும் இந்த ஜில்லாவிலுள்ள நிர்மாண ஊழியர் நடத்திய ஒரு முகாமுக்குச் சென்று குஷ்டரோக நிவாரணம் சம்பந்தமாகப் பிரசங்கங்கள் செய்தோம். அந்தவேலை செய்ய வேண்டிய முறைகளைக் காட்டவும் செய்தோம். டாக்டர் இரண்டு கிராமங்களுக்குப் போய் அங்கும் இந்தவிதமாகச் செய்துவந்தார்."

## "காப்பி" யடித்தல்

கேள்வி :—நீங்கள் மாமிசம் உண்ணவில்லை என்பதற்காக மட்டுமே தாமும் மாமிசம் உண்பதை விட்டுவிடுகிறவர்கள் சரியான காரியத்தைச் செய்வதாகச் சொல்ல முடியாது என்று தாங்கள் கூறுகிறீர்கள். தங்களுடைய இந்த அபிப்பிராயம் தவறானதல்லவா?

பதில் :—நான் கூறியதில் என்ன தவறு இருக்கிறது என்பது எனக்கு விளங்கவில்லை. ஒருவரைப் பார்த்து ஒன்றை விட்டுவிடுகிறவர் மற்றொருவரைப் பார்த்து அதை மறுபடியும் கைக்கொண்டுவிடலாமல்லவா? நான் கூறியதன் சாரம் யாதெனில் எதையும் நன்றாக ஆராயாமலும் மனம் முழுமூச்சாக ஏற்றுக்கொள்ளாமலும் செய்யக்கூடாது என்பதேயாகும். ஆராயாமல் காப்பி யடிப்பது என்பது அற்பகாலத்தில் வீணாட்டேயன்றி வேறன்று. அது குழியில் தள்ளி பெருந்தீமையே உண்டாக்கும்.

புது டில்லி, மோ. க. காந்தி.
21—6—46

[ஹரிஜன பந்துவிலிருந்து]

## நூல் செலாவணி

திருமதி. அன்னபூர்ணாதேவி பர்தோலிக்கு அருகிலுள்ள மாதி என்னும் இடத்தில் தாம் செய்துவரும் வேலையைக் குறித்து அனுப்பியுள்ள கடிதம் வருமாறு :—

"நான் இந்தச் சிறு கிராமத்தில் சிறுமிகளுக்குச் சேவை செய்ய முயன்று வருகின்றேன். அதற்காக அவர்களுடைய குடும்பத்தாருடன் தொடர்புவைத்துக்கொண்டும் வருகின்றேன். ஆனால் திரு. ஜகத்ராம் இந்தச் சிறு கிராமத்தை விட்டுவிட்டு பெரியதோர் இடத்தில் வேலை செய்யுமாறு சொன்னார். நான் ஒன்றும் விளங்காமல் திகைத்துப்போனேன். ஆயினும் தங்கள் கடிதம் எனக்கு மறுபடியும் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டியிருக்கின்றன.

நான் சில குடும்பங்களுடன் சரியான முறையில் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறேன். ஜனங்கள் என் சொற்கேட்கவும் நான் உதவி செய்வதற்காக முயன்று வருவதைப் பாராட்டவும் ஆரம்பித்திருக்கிறார்கள். நாங்கள் நூல் செலாவணி ஏற்படுத்தும் நோக்கத்துடன்சென்ற வருஷம் ஒரு நூல்கடை ஆரம்பித்தோம். அதைப்பற்றித் தங்கட்கு எழுத விரும்புகின்றேன். தினந்தோறும் மாலையில் நடக்கும் பிரார்த்தனை சமயத்தில் கிராமவாசிகளுக்கு பொழுது போக்காக ஏதாவது நடத்துவது வழக்கம். அந்தப் படியே ஒரு நாள் மாலையில் நூல்கடை சம்பந்தமான ஒரு சிறிய நாடகம் நடித்திக் காட்டினோம்.

அதுதான் நான்குறிப்பிட்ட நூல்கடை உண்டாவதற்குக் காரணம். சென்ற வருஷம் மே மாதத்திலிருந்து நாங்கள் தினசரி உபயோகத்துக்கு அவசியமான சோப், எண்ணெய், உப்பு, வெல்லம், மிளகாய், நிலக்கடலை போன்ற பொருள்களை பணத்துக்குக் கொடாமல் நூலுக்குக் கொடுத்து வருகின்றோம். எங்களிடம் மே மாதம் 43 கழி நூல்தான் இருந்தது. ஆனால் செப்டம்பரில் பார்க்கும்பொழுது 233 கழிகள் இருந்தன. சென்ற மாதம் நூல்வருவது குறைந்துவிட்டது. அதற்குக் காரணம் ஜனங்கள் அறுவடையில் ஈடுபட்டிருந்ததுதான்.

என்னுடைய பாடசாலையில் படிக்கும் குழந்தைகளில் 10 வயதானவர்களே இந்தக் கடையை நடத்தி வருகிறார்கள். இதற்குமுன் குப்பை கூளத்தில் புரண்டு கொண்டிருந்த குழந்தைகளில் இருவரே இப்பொழுது இந்தக்கடையை நடத்துவதில் பிரதானமானவர்களாக இருக்கிறார்கள்."

புது டில்லி, மோ. க. காந்தி.
32—6—46

[ஹரிஜன பந்துவிலிருந்து]

---

### ஸ்ரீ எஸ். என். அகர்வால்

மகாத்மா காந்தி அடிகளின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு திட்டம் அமைப்பதில் மகா வல்லவர் ஸ்ரீ எஸ். என். அகர்வால். அவர் எழுதிய நூல்களெல்லாம் உலகப் பிரசித்தியானவை. "காந்திய அரசியல்" என்று அவர் எழுதிய புதிய நூல் ஒன்றைக் காந்தி யடிகள் மிகவும் பாராட்டி எழுதி யிருக்கிறார். மேற்படி புத்தகத்தை காந்தியக் கவிஞரான நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் தமிழாக்கி யிருக்கிறார்கள்.

காந்திய அரசியல் : வெளிவந்து விட்டது. விலை ரூ. மூன்று

# தமிழ் ஹரிஜன்

…… தமிழ்ப்பண்ணை, வெளியீடு : ஆசிரியர், நாமக்கல் கவிஞர். ……

ஜூன் 30 ஞாயிறு 1946

## வெள்ளையர் தாங்கும் பாரம்

தென் ஆப்பிரிக்காவை ஆளும் யூனியன் பார்லிமெண்டு சபையார் இந்தியர்களைக் குறிப்பிட்ட இடங்களில் ஒதுக்கி வைப்பதற்கான ஒரு சட்டத்தைச் செய்திருக்கிறார்கள். அது அனியாயம் என்று எதிர்ப்பதற்காக அங்குள்ள இந்தியர்களில் பொறுக்கி எடுக்கப் பெற்ற ஆண்களும் பெண்களும் (தென் ஆப்ரிக்காவில் சாத்வீக எதிர்ப்பு என்று கூறப்படுகிற) சத்தியாக்கிரக இயக்கத்தை டாக்டர் நாயக்கருடைய தலைமையில் ஜூன் 14-ந்தேதி ஆரம்பித்திருப்பதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது. அரசாங்கத்தாரும் முனிசிபல் சபையாரும் அந்தச் சாத்வீக எதிர்ப்பினரை ஒன்றும் செய்யவில்லை என்பதாயும் ஆனால் டர்பன் நகரத்திலுள்ள வெள்ளையரில் சிலரே சட்டத்தை நிறைவேற்றும் காரியத்தைத் தாங்களே செய்ய எண்ணி சாத்வீக எதிர்ப்பினருடைய முகாமிற்குள் பலாத்காரமாக நுழைந்து அங்கிருந்த கூடாரங்களை அவசரம் அவசரமாக அறுத்தெடுத்துக்கொண்டு போய் விட்டதாகவும் அந்த ஸ்தாபனம் கூறுகிறது. அது மேலும் கூறுகிறது :—

“வெள்ளை இளைஞர்கள் நூறு பேர் வருவதைக் கண்டு இந்திய சாத்வீக எதிர்ப்பினர் 50 பேர் வரிசையாகக் கைகோர்த்து நின்றார்கள். ஆனால் வெள்ளை இளைஞர்கள் பலாத்காரமாக சாத்வீக எதிர்ப்பினரைத் தள்ளிக்கொண்டு உள்ளேபோய் கூடாரங்களை அறுத்துக் கிழித்துவிட்டார்கள். காயப்பட்டவர்களைத் தூக்குவதற்காகவுள்ள கட்டில்களை நொறுக்கிவிட்டு தலையணைகளையும் போர்வைகளையும் எடுத்துக்கொண்டு போனார்கள். இந்தக் குழப்பத்தில் இரண்டு இந்தியப் பெண் எதிர்ப்பினர் வெள்ளை இளைஞர்கள் காலால் உதைக்கப்பட்டதாகவும் ஆனால் காயமடையவில்லை என்பதாகவும் சொல்லப்படுகிறது ”

இவ்விதமாக வெள்ளையர்கள் மூன்று நாட்கள் அக்கிரமங்கள் செய்தபிறகு போலீஸார் சாத்வீக எதிர்ப்பினருடைய முகாமுக்கு அருகில் நின்றுகொண்டு யாரும் சாத்வீக எதிர்ப்பினருக்கு இடைஞ்சல் செய்யவோ அவர்களைப் பணிய வைப்பதற்தாகப் பயமுறுத்தவோ கூடாது என்று எச்சரித்துக் கொண்டிருந்ததாகப் பத்திரிகைகள் கூறுகின்றன. இது மனத்திற்கு ஆறுதல் தரும் செய்தியாக இருக்கிறது. இதைப் பரிபூரணமாக நம்புவோம். இவ்விதம் சாத்வீக எதிர்ப்பினருக்கு அளிக்கப்படும் பாதுகாப்பானது தனித் தனி செய்யும் போக்கிரித்தனமாயினும் ஒன்று சேர்ந்து செய்யும் போக்கிரித்தனமாயினும் எவ்வித போக்கிரித்தனத்தையும் தடுக்கக் கூடிய பாதுகாப்பாக இருக்கும் என்று நம்புவோம். ஜனங்கள் ஒன்று சேர்ந்து யோசித்துச் செய்யும் அக்கிரமம் அமெரிக்காவில் சர்வ சாதாரணம். அந்தவிதமாக நடக்க அமெரிக்கர்கள் வெட்கப்படுவதில்லை.

இந்தியர்களை ஒதுக்கிவைக்கும் சட்டம் நிறைவேற்றப் படுவதற்கு முன், மிக்க மரியாதையானவர்கள் என்று சொல்லி வந்த வெள்ளையர்களே ஆசியாக்காருக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து வந்தார்கள். அது விஷயத்தில் அவர்கள் காட்டிய ஆவேசத்துக்கு அளவேயில்லை. இப்போது அவர்கள் எதிர்பார்த்ததற்கும் அதிகமான தடைகளை விதிக்கின்ற சட்டமானது நிறைவேற்றப்பட்டும் அவர்கள் மனம் திருப்தியடையவில்லை. அவர்களில் தீவிரமானவர்கள் அந்தச் சட்டத்தைத் தாங்களே அமல் நடத்துவதென்றும் தீர்மானித்து விட்டார்கள். ஆனால் இப்படி நடந்து கொள்வது வெள்ளையருடைய பெயரைக் கெடுப்பதாகும் என்பதை அவர்கள் உணராதிருக்கிறார்கள் !!!

தாங்கள் செய்யும் சட்டத்திற்குக் கீழ்படிந்து நடப்பதே சரியான காரியம் என்று எண்ணும் வெள்ளை ஆண்களுக்கும் பெண்களுக்கும் நான் விடுக்கும் வேண்டுகோள் யாதெனில் அவர்கள் போக்கிரித்தனத்தையும் சட்டத்தை ஜனங்களே அமல் நடத்தும் அக்கிரமத்தையும் எதிர்த்துப் பிரசாரம் செய்து ஜனங்களை ஒழுங்காக நடந்துகொள்ளும்படி செய்ய வேண்டும் என்பதே. சமூகத்தில் காணப்படும் தவறான சட்டங்களையும் வழக்கங்களையும் பிற தீமைகளையும் நல்ல முறையில் நீக்கும் நோக்கத்துடனும் போக்கிரித்தனம், ஜனங்கள் தாங்கள் அமல் நடத்தும் அக்கிரமம் உட்பட சகல பலாத்கார முறைகளையும் எதிர்ப்பதற்கு ஏற்ற ஆயுதமாகவுமே சாத்வீக எதிர்ப்பு என்னும் புதிய முறை ஏற்பட்டதாகும். அது மனிதனுடைய இதயத்தையே இளக்க முயல்கிறது. அறிவு மூலம் சொல்லலாம், ஆனால் அது அநேக சமயங்களில் பயன் தராமலே போகிறது. சுயநலம் வந்து அறிவை மழுங்கச் செய்து விடுகின்றது. ஆனால் சரியான அளவில் இதயத்தைத் தொட முடியுமானால் நிச்சயமான பலன் கிடைக்கும். பலன் கிடையாமற் போகுமானால் சத்தியாக்கிரக முறையைக் குற்றம் சொல்லக்கூடாது, சத்தியாக்கிரகம் செய்பவருடைய திறமைக் குறைவையே குற்றம் சொல்ல வேண்டும். சரித்திரத்திலிருந்து சரியான உதாரண புருஷர் ஒருவரைச் சுட்டிக்காட்ட முடியாது. சத்தியாக்கிரகம் என்றவுடன் இயேசுவின் நாமத்தையே சொல்லத் தோன்றுகிறது. ஆனால் அவ்விஷயம் பிரமாதமான தோல்விக்கே உதாரணமாக இருக்கிறது. ஆயினும் மேனாட்டில் அவரைச் சாத்வீக எதிர்ப்பினர்களுக்குள் அரசராகவே மதிக்கின்றார்கள். ஆனால் அவர் விஷயத்திலேனும் “சாத்வீக” என்னும் பதத்தை உபயோகிப்பது தவறு என்று நான் பல வருஷங்களுக்கு முன்னால் ஆப்பிரிக்காவில் இருந்த காலத்திலேயே காட்டியிருக்கின்றேன். சரித்திரத்தில் காணப்படும் எதிர்ப்பினர்களில் அவரேதான் அதிகமாக எதிர்த்தவராவார். அவர் அனுஷ்டித்த அஹிம்சை மாசு மறுவற்றதாகும். இவ்விதம் இயேசு செய்துகாட்டியது போன்ற எதிர்ப்பைத் தகர்க்கவே வெள்ளை அக்கிரமிகள் முயன்று வருகின்றார்கள். ஆனால் நம்முடைய தேசத்து மக்கள் தங்கள் வீரம் பொருந்திய சாத்வீக எதிர்ப்பின் மூலம் அந்தப் போக்கிரிகளை வெட்கித் தலைகுனியச் செய்வது மட்டுமின்றி தென் ஆப்பிரிக்கா தேசத்துச் சட்டப் புஸ்தகத்தை ஆபாசப் படுத்திக் கொண்டிருக்கும் அநீதியான சட்டத்தை ரத்து செய்து விடும்படியாகவும் செய்து விடுவார்கள் என்று நம்புகிறேன். ஒரு கட்சியார் மட்டுமே எவ்வித பலாத்காரத்திலும் இறங்காமல் தங்களுக்கு இழைக்கப்படும் சகல துன்பங்களையும் சந்தோஷமாகத் தாங்கிக் கொள்வார்களானால் அத்தகைய செயலானது சமூகத்தில் ஏற்பட்டுள்ள தீமையை எதிர்க்குமாறு ஜனங்களுடைய மனத்தை மாற்றிவிடும். கடைசியாகப் பார்க்கும்பொழுது சட்டம் செய்பவர் என்பவரும் ஜனங்களுடைய பிரதிநிதிகள் தாமே. அவர்கள் ஜனங்களுக்குப் பணிந்துதானே தீயதான சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். எந்த ஜனங்கள் தீய சட்டத்தை இயற்றும்படி கட்டளையிட்டார்களோ அந்த ஜனங்களே தீமைசெய்து விட்டதை உணர ஆரம்பித்து தீய சட்டத்தை ரத்து செய்து

விடச் சொன்னால் ஜனங்களுடைய பிரதிநிதிகளாகவுள்ள சட்டசபையார் ரத்து செய்து விடவேண்டியதுதான்.

வெள்ளையர்கள் தாங்களே இந்தியர்களைத் தாங்கும் பெரும் பாரத்தைக் கஷ்டப்பட்டுப் பொறுத்து வருவதாகக் கூறுவது வழக்கமாயிருக்கிறது. ஆனால் அவர்கள் கூறுவது உண்மையாயிருக்குமானால், அவர்கள் பாதுகாக்கின்றோம் என்று சொல்லிக்கொண்டு வெள்ளையரல்லாதவர்களை அடக்கி ஆதிக்கம் செலுத்தாமல் தங்களையே அரித்துவரும், உள்ளொன்று வைத்து புறமொன்று கூறும் தீய வழக்கத்தை விட்டு விடவேண்டும். வெள்ளையர்கள் எந்த மனிதனையும் தமக்குச் சமானமானவராக நடத்தக் கற்றுக்கொள்ளவேண்டிய காலம் வந்துவிட்டது. தோலின் வெள்ளை நிறத்தில் எவ்வித மாய சக்தியும் இருப்பதாகத் தெரியவில்லை. எந்த நிறமாயிருந்தாலும் எந்த தேசத்தைச் சேர்ந்திருந்தாலும் சமமான சந்தர்ப்பங்கள் தரப்பட்டால் சகலமக்களும் சரி சமானமானவர்களாகவே காணப்படுவர் என்பதைச் சரித்திரம் பலதரம் நிரூபித்துக் காட்டியிருக்கின்றது. ஆதலால் உலகத்திலுள்ள வெள்ளை மக்கள் எல்லோரும் அதிலும் சிறப்பாக இந்தியாவிலுள்ள வெள்ளை மக்கள் அனைவரும், தங்களுடைய மானத்தையும் தங்கள் தாய் நாட்டின் கௌரவத்தையும் காப்பாற்றுவதற்காகத் தைரியமாக போரிடும் இந்திய சாத்வீக எதிர்ப்பினர்க்கு எவ்வித இடைஞ்சலும் செய்யாதிருக்குமாறு தென் ஆப்பிரிக்காவிலுள்ள தங்கள் இனத்தார்க்குச் சொல்லுதல் கடன். "உனக்கு விரும்புவதையே பிறர்க்கும் செய்" என்பது இயேசு கிறிஸ்துவின் வாக்கு. இதன்படி நடவாதவர்கள் அதைத் சொன்னவர் பெயரால் "கிறிஸ்தவர்" என்று கூறிக் கொள்வது தவறாகும். மேற்கண்ட இதோபதேசத்தை உலகுக்கு அருளிய அந்த வெள்ளையரல்லாத ஆசிய மகானை அவர்கள் தங்கள் இதயத்திலிருந்து பிரஷ்டம் செய்து விட்டார்களா? உலகத்தில் பிறந்துள்ள உன்னதமான அறவோர் அனைவரும் ஆசியாக்காரர்களே என்பதையும் அவர்களுக்கு வெள்ளை முகம் கிடையாது என்பதையும் மறந்து விட்டார்களா? இந்த மகான்கள் எல்லோரும் மறுபடியும் பூலோகத்துக்கு வந்து தென் ஆப்பிரிக்காவில் வாசம் செய்வதற்காகச் செல்வார்களானால், அவர்கள் "ஒதுக்கப்பட்ட" இடங்களில்தான் வசிக்க முடியும். அவர்களும் சட்டப்படி வெள்ளையர்க்குச் சமானமாக இருக்க முடியாத ஆசியாக்காரராகவும் வெள்ளையரல்லாதாராகவுமே கருதப்படுவார்கள்.

ஜாதிகளைப் பிரித்து வைக்கும் சட்டத்தின் உதவியையும் ஜனங்களே சட்டத்தை அமல் நடத்தும் அக்கிரம முறையின் உதவியையும் நம்பி வாழும் நாகரிகம் எதுவும் நாகரிகம் என்ற பெயர்க்குத் தகுதியுடையதாகுமா? அந்த உதவிகள் அதைத் தாங்கும் என்பதும் சந்தேகம்தான். மேகம் இருண்டிருந்தாலும் அதன் விளிம்பு வெள்ளி நிறமாக விளங்கினால் அதிசீக்கிரத்தில் மேகம் நீங்கிச் சூரியன் தோன்றுவான் என்று எண்ணுவது வழக்கம். இப்பொழுது தென் ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளைப் பாதிரியார் ஸ்காட் என்பவரும் அவருடன் சேர்ந்த வெள்ளைத் தோழர்களும் இந்திய சாத்வீக எதிர்ப்பினருடன் சேர்ந்து துன்பங்களை அனுபவிக்க தைரியமாக முன்வந்திருப்பதானது இந்திய மக்களுடைய தலைக்கு நேரே பரந்து நிற்கும் கார்மேகத்தின் வெள்ளி விளிம்பாக இருந்து வருகின்றது.

புது டில்லி, மோ. க. காந்தி.
26—6—46.

## டாக்டர் லோஹியாவின் அறைகூவல்

டாக்டர் லோஹியா கோவா பட்டணத்து ஜனங்களுடைய வேண்டுகோளின் பேரில் கோவாக்குச் சென்றதாகவும், பிரசங்கங்கள் செய்யக்கூடாது என்று அவருக்கு கோவா சர்க்கார் உத்திரவிட்டிருப்பதாகவும் பத்திரிகைகள் கூறுகின்றன. கோவா ஜனங்கள் 18 வருஷங்களாக கூட்டங்கள் கூட்டுவதற்கும் சங்கங்கள் அமைப்பதற்குமுள்ள உரிமையை இழந்து நிற்பதாக டாக்டர் லோஹியா அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அந்தக் காரணத்தால்தான் அவர் சர்க்கார் உத்திரவை மீறினார். இந்த விதமாக நடந்ததன் மூலம் அவர் பிரஜா உரிமை விஷயத்துக்கும் விசேஷமாக கோவா மக்களுக்கும் சேவை செய்துள்ளார். கோவா என்பது போர்த்துகீஸியருடைய குடியேற்றப் பிரதேசம். பிரிட்டிஷ் சர்க்காருடைய தயவினாலேயே அது இன்னும் ஒரு தனி ராஜ்யம்போல் இருந்து வருகிறது. இந்த நிலைமையில் அந்த சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்கார் செய்யும் பிழைகளை யெல்லாம் காப்பி யடிப்பது என்பது சகிக்க முடியாத காரியமாகும். இந்தியா சுதந்திரம் அடைந்து விட்டால் அதன் பிறகு கோவா மக்கள் இந்தியச் சட்டங்களுக்கு விரோதமாக நடக்கச் சம்மதிக்க மாட்டார்கள். அப்பொழுது கோவா ஜனங்கள் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாமலே சுதந்திரம் பெற்று விடுவார்கள். ஆதலால் காலத்தின் போக்கை அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும் என்றும் தங்களுக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு மிடையில் எவ்வித ஒப்பந்தம் உண்டாயிருந்தபோதிலும் அதைச் சார்ந்து நிற்காமல் தங்கள் ஜனங்களையே சார்ந்து நின்று அவர்களுடன் கௌரவமான ஒரு ஒப்பந்தத்திற்கு வரவேண்டும் என்றும் கோவா சர்க்காருக்கு யோசனை கூறத் துணிகின்றேன்.

கோவா மகாஜனங்களுக்கு நான் கூறுவது யாதெனில், இந்தியாவிலுள்ள மற்ற பாகங்களிலுள்ள மக்கள் எப்படி சர்வ வல்லமை பொருந்திய பிரிட்டிஷ் சர்க்காரிடமுள்ள அச்சத்தைத் துறந்துவிட்டார்களோ அப்படியே அவர்களும் கோவா சர்க்காரிடமுள்ள அச்சத்தைத் துறந்துவிட்டு பிரஜா உரிமைகளுக்காக போரிடவேண்டும் என்பதே யாகும். கோவா மக்களிடையே பல மதங்கள் காணப்பட்டாலும் அவற்றை சமூக வாழ்க்கையைக் குலைக்கும்படி விட்டுவிடலாகாது. மதம் என்பது அவரவருடைய சொந்த விஷயமே யாகும். அதனால் அதைச் சண்டைக்கு ஆஸ்பதமாக ஆக்கிவிடக்கூடாது.

புது டில்லி
26—6—46 மோ. க. காந்தி

## வாரக் கடிதம்

### பத்திரிகை அனர்த்தம்

சென்ற வாரம் புது டில்லியில் கூடியிருந்த பத்திரிகா நிருபர்கள் அநேகர் கயிறு திரிப்பதைக் கண்டு காந்தியடிகள் கூறியதாவது :—

"என்னை ஒரு நாளைக்கு மட்டுமேனும் வைஸிராயாகச் செய்து விட்டால் நான் உடனே சகல பத்திரிகைகளையும் நிறுத்தி விடுவேன். ஆனால் ஹரிஜனைத் தவிர" என்று சிரித்துக் கொண்டே சொன்னார்,

அத்துடன் அவர்—"ஹரிஜன்" என்னும் பெயரை விட்டு விட்டு "பங்கி" (தோட்டி) என்னும் பெயரை வைக்கக் கூட விரும்புகிறேன். இப்போதுள்ள நிலைமையில் அதுவேதான் சரியான பெயராகும்" என்றும் கூறினார்.

அதன்பின் மறுபடியும் அவர்—"பாருங்கள் நீங்கள் செய்யும் அனர்த்தங்கள். நான் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் விவாதங்களில் கலந்து கொண்ட விதத்தைப்பற்றிப் பத்திரிகைகள் கூறுவதை நம்புவதானால்

ஹிந்துக்கள் தங்களுக்கு நான் துரோகம் செய்துவிட்டதாக எண்ணினால் தவறாகாது. காரியக் கமிட்டியில் நான் மட்டுமே எதிர் வாதம் கூறியதாகவும் பத்திரிகைகளில் காணப்படுவது தவறாகும். நிருபர்கள் ஜாக்கிரதையாக நடக்க வேண்டும். அவர்கள் அப்படி நடக்கா விட்டால் ஜனங்கள் இப்படித் தவறாகக் கயறு திரிக்கும் செய்திகளைப் படிக்கும் ஆவலைத் துறந்துவிட வேண்டும். அத்தகைய பத்திரிகைகளை வாங்காமலே இருந்துவிட வேண்டும்.''

### தூஷிக்கும் இயக்கம்

காங்கிரஸ் காரியக் கமிட்டியார் பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியாருடைய திட்டம் சம்பந்தமாக எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக ஒரு முடிவுக்குவர முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் சில பத்திரிகைகள் அவர்கள் வேண்டுமென்று காலங்கடத்தி வருவதாகவும் அவர்கள் சச்சரவிட்டுக் கொண்டிருப்பதாகவும் குறை கூறுகின்றன.

இது சம்பந்தமாகக் காந்தியடிகள் கூறியது :—

சீக்கிரம் முடிவுக்கு வராததற்குக் காரணம் சச்சரவு அன்று. அபிப்பிராய பேதத்தைச் சச்சரவு என்று கூறுதல் தவறு. அபிப்பிராயபேதம் உண்டாவது சகஜம். இந்தியாவில் ஹிந்துக்களே பெரும்பாலோரா யிருப்பதால் காங்கிரஸ் மெம்பர்களிலும் பெரும்பாலோர் ஹிந்துக்களாகவே இருக்கிறார்கள். அதைக் கொண்டு எந்தவிதத்திலும் காங்கிரஸை ஹிந்து ஸ்தாபனமாகக் கூறிவிட முடியாது. அதன் தலைவர் மௌலானா ஆஸாத் இதற்குமுன் எந்தத் தலைவரும் வகிக்காத நீண்டகாலம் தலைமைப் பதவியை வகித்து வருகின்றார். காங்கிரஸ்காரர் அனைவரும் அவருக்கு மரியாதை செலுத்துகின்றார்கள். காங்கிரஸ் இந்தியா முழுவதற்கும் தர்மகர்த்தாவாகத் தன்னை ஆக்கிக்கொண் டிருக்கின்றது. அத்தகைய ஸ்தாபனத்தில் பெரும்பான்மை வகுப்பார் சிறுபான்மை வகுப்பார்க்கு கௌரவமாக விட்டுக் கொடுப்பது கடனாகும். காங்கிரஸின் ஆயுதம் அஹிம்சை யொன்றேதான். அதனால் காங்கிரஸ் தலைவருடைப பலமெல்லாம் ஜனங்கள் அனைவரும் கட்டுப்பாட்டுடன் அவரை ஆதரிப்பதுதான். அதனால்தான் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் சகல இனத்தாருடைய ஏகமனதான அபிமானத்துடனேயே மத்திய சர்க்கார் அமைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். அதனால்தான் அவர்கள் இடைக்கால சர்க்கார் அமைக்கும் விஷயத்தில் இவ்வளவு கவலை எடுத்து வருகிறார்கள்.''

### காரியக்கமிட்டி முடிவு

இது சம்பந்தமாகக் காந்தியடிகள் கூறியது:—

“அரசியல் நிர்ணய சபை விஷயமாகப் பல குறைகள் இருந்தபோதிலும் அந்தச் சபையில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே அங்கத்தினர்களாக இருக்கப் போவதால் அரசியல் நிர்ணய சபை சம்பந்தமாக மந்திரி தூது கோஷ்டியார் செய்துள்ள யோசனைகளைக் காரியக் கமிட்டியார் ஏற்றுக்கொண் டிருக்கிறார்கள். நான் அந்த முடிவை எதிர்த்ததாகப் பத்திரிகைகள் கூறுவது தவறு. நான் முதலில் அந்த யோசனைகளை நல்லதாக எண்ணினாலும் இப்பொழுது குறைகள் நிறைந்ததாகவே எனக்குத் தோன்றுகிறது. ஆயினும் காங்கிரஸ் கமிட்டியார் ஏற்றுக்கொள்ள முடிவு செய்து விட்டதால் அதையே மகாஜனங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.''

புது டில்லி,
24—6—46 பியாரிலால்

## விருந்தா மரணமா ?

முஸோரி சுகவாசஸ்தலத்துக்கு முதன் முதலாக வரும்நாகரிகர் வண்டியைவிட்டு இறங்கியதும் கந்தையைக்கட்டிகொண்டும் ஒரே நாற்றமாக நாறிக் கொண்டுமுள்ள ஏழை மக்கள் பலர் ரொட்டித் துண்டைப் போட்டால் அதைத் தின்ன பட்டினியாகவுள்ள நாய்கள் எப்படிப் பறந்துகொண்டு வருமோ அதுபோல் தம்முடைய சாமான்களைத் தூக்குவதற்காகவந்துமொய்த்து விடுவதைக் காண்பார். அவர்கள் ஒருவரை யொருவர் இடித்துத் தள்ளும்பொழுது எவரேனும் ஒருவர் அந்தப் புது மனிதர்மேல் விழுந்துவிடுவார், அப்பொழுது அவருக்கு அதிகபாகக் கோபம் வந்துவிடும். அதைத் தவிர அவர் அவர்களை வேறு விதத்தில் கவனிக்கமாட்டார். எந்தக் கூலிக்கு அதிருஷ்டம் இருக்குமோ அவர் மூட்டைகளைத் தூக்கிக் கொள்வார், எந்த ரிக்ஷா இழுப்போர்க்கு அதிருஷ்டம் இருக்குமோ அவர் வந்தவரை வண்டியில் வைத்து இழுத்துச் செல்வார். இறுதியில் நாகரிகமான ஹோட்டல் ஒன்றுக்குப் போய்ச் சேர்வார். வந்தவர் அந்த இரண்டு ஏழைகளுக்கும் ஒன்றிரண்டு ரூபாயை எறிவார். அதன்பின் சுகவாச ஸ்தலத்தின் சுகானுபவங்களில் ஆழ்ந்து விடுவார். ‘ஆகா என்ன அழகு என்ன ஆனந்தம் என்ன விநோதம்'' என்று மகிழ்வார். அவருடைய விடுமுறை நாள் கழிந்ததும் ஊருக்குத் திரும்புவார். அன்றும் ஒரு நாள் மறுபடியும் ஏழைக் கூலியைக் கண்ணால் காண்கின்றார். மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு கூலி நடக்கின்றார். நாகரிக மனிதர் அவரைப் பற்றி அணுவளவு கூடச் சிந்திப்பதில்லை. அவருடைய எண்ணம் எல்லாம் ஸாவாய் ஹோட்டல் போன்ற நாகரிக வாழ்வுச் சாதனங்களிலேயே ஆழ்ந்து போயிருக்கும். அந்த ஏழைகளும் தம்மைப் போல மனித ஜாதியைச் சேர்ந்தவரே என்பது அரைக்கணங் கூட அவருடைய நினைவுக்கு வருவதில்லை.

இந்த அதிர்ஷ்டம் கெட்ட, ஆண்டவனால் கைவிடப்பட்ட ரிக்ஷாக் கூலிகளும் சுமைதூக்கிகளும் தோட்டிகளும் வசிக்கும் சேரிகளைப் போய்ப்பார்த்து வரும்படி காந்தியடிகள் முஸோரியில் தாமதித்திருந்தபொழுது என்னை அனுப்பி வைத்தார். திரு. பிரிஜ்கிஷன் சண்டிவாலாவும் என்னுடன் வந்தார். அந்த ஏழைகள் வசிக்கும் சேரிக்குப் போகும் பாதை ஆபாசமாயும் நாற்றமாயும் இருந்தது. அதில் நடக்க மனம் வரவே இல்லை. இரவில் வெளிச்சம் கிடையாது. ஆயினும் நாங்கள் அந்தப் பாதை வழியாகச் சென்று மனிதக் குகைகளுக்கு ஊர்ந்து சென்றோம். அங்குதான் மனித ஜாதியில் அளவுக்கு மிஞ்சி வழிந்தோடும் மக்கள் முஸோரியிலுள்ள நாகரிக மக்களுடைய சுகபோக வாழ்விற்கு இடைஞ்சல் செய்யாதபடி பத்திரமாக அடைத்து வைக்கப் பட்டிருந்தார்கள்.

### வீட்டு வசதிகள்

இந்தத் தொழிலாளர்களின் குடியிருப்பு நிலைமை படுமோசமாக இருந்தது. போதுமான குடில்கள் காணப்படவில்லை. காணப்பட்ட குடில்களும் காற்றும் வெளிச்சமும் இல்லாதபடி கட்டப்பட்டனவைகளாக இருந்தன. அவைகளைப் பழுது பார்க்கவுமில்லை. மழைகாலத்தில் மேலே யிருந்து தண்ணீர் சொட்டும், உள்ளேயும் தண்ணீர் வந்து கட்டும். ஏழடி அகலமும் ஏழடி நீளமுமுள்ள அறைகளில் 16 பேர் வரை வசித்து வருகிறார்கள். அந்த அறைகளில் இருப்பது அவர்கள் மட்டுமல்ல, அவர்களுடைய தட்டுமுட்டுச் சாமான்களும், அடுப்பு விறகு முதலியவைகளும் அங்கேயேதான். அதனால் பெரும்பாலோர் பாதைகளிலும் கடைகளின் வராந்தாக்களிலும் சுவர் ஓரங்களிலுமே படுத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்குப் போர்த்திக்

கொள்ளப் போதுமான துணி எதுவும் கிடையாது. அதனால் ஆண்டுதோறும் குளிர் தாங்கமுடியாமல் இறப்பவர்கள் பத்துப்பேர்க்குக் குறைவில்லை என்று கூறுகிறார்கள்.

அநேக ஏழைகள் முஸோரிக்குப் போய் வேலை செய்து பிழைக்கலாம் என்று வருகிறார்கள். ஆனால் இங்கோ வேலை கிடைப்பதில்லை, வெளியில் தெருக்களில் படுத்துத் தூங்க வேண்டியவர்களாக ஆகிவிடுகிறார்கள். அவர்களுக்கு முன் வந்தவர்கள் யாரேனும் தெரிந்தவர்களாக இருந்தால் அவர்கள் வீட்டில் தங்கள் மூட்டைகளை வைத்துக்கொள்ளவும் சமைத்துக் கொள்ளவும் இடம் பெறுகிறார்கள். ஆனால் இரவில் அவர்களுடைய தோழனா யிருப்பது பனியோ மழையோ கொட்டும் வானம் மட்டுந்தான். ஏழடி நீளம் ஏழடி அகலமுள்ள அறையில் பதினாறு பேர் வசிப்பது என்பது யாராலும் முடியாத காரியம்.

### கக்கூசுகள்

போதுமான கக்கூசுகள் கிடையா. ஒரு சேரியில் ஒரே ஒரு கக்கூசுதானிருந்தது. அதுவும் எடுப்புக் கக்கூசுதான். அந்த ஒரு கக்கூசில் நூறுபேர் போய் வந்தார்கள். அந்தக் கக்கூசுக்குப் போகும் பாதை அபாயகரமா யிருந்தது. இரவில் பெண்களும் குழந்தைகளும் போகவே முடியாது.

### ஜலவசதி

சேரிகளுக்கு வெகு தூரத்தில் சில முனிசிபல் தண்ணீர்க் குழாய்கள் காணப்படுகின்றன. அவைகளில் குளிக்கக்கூடாது. வேறு ஸ்நான அறைகளும் கிடையா. அதனால் குளிப்பதும் துணி துவைப்பதும் அவர்களுக்கு அபூர்வமாகக் கிடைக்கக்கூடிய சுகானுபவங்களாகும். அந்தக் குழாய்களிலும் கோடை காலத்தில் தினந்தோறும் சில மணி நேரம் ஜலம் வருவதில்லை. இதிலிருந்து இந்த ஏழை மக்களின் நிலைமை இத்தகையது என்று தெரிந்து கொள்ளலாம்.

### நேப்பாளத்தார் சேரி

நாங்கள் "கின்கிரேய்க்" என்னும் குன்றிலிருந்து கீழே பார்த்தபொழுது, கூலிகள் பலர் வெயில் காய்ந்துகொண்டும், தலைப்பேன் பார்த்துக்கொண்டும், சீலைப்பேன் எடுத்துக்கொண்டும் இருப்பதைக் கண்டோம். அவர்கள் அனைவரும் ஒரே குடிசையில் வசித்து வந்தார்கள். அது 35 அடி நீளம் 10 அடி அகலம். மூன்று அறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மொத்தம் இரண்டு ஜன்னல்களும் மூன்று வாசல்களுமே உண்டு. அந்தக் குடிசையில் மொத்தம் நூறு பேர் வசித்து வந்தார்கள். அந்தக் குடிசை முழுவதும் புகை நிறைந்திருந்தது. உள்ளே போனதும் எங்களுக்கு மூச்சுத் திணறிவிட்டது.

அவர்கள் உண்ட உணவோ சொல்லுந் தரமன்று. மாவைப் பார்த்தால் அசங்கியமாயிருந்தது. ரொட்டியோ உண்ணத் தகுந்ததாகத் தோன்றவில்லை. அதில் ஒரு துண்டு கொண்டுவந்து காந்தியடிகளிடம் காட்டினோம். அவர் அதைப்பார்த்து "இதுவா உணவு? இதை உணவு என்றும் சொல்ல முடியுமா?" என்று கூறினார். அவர்களுக்குக் காய்கறிகள் கிடைப்பது அபூர்வம். வெங்காயமும் உப்பும் மிளகாயும் சேர்த்து ஏதோ ஒருவிதமான குழம்பு செய்து கொள்கிறார்கள். அதனால்தான் அவர்கள் மலச்சிக்கலாலும் குடல்வலியாலும் கஷ்டப்படுகிறார்கள். சொரிசிரங்கும் பேன்பற்றுதலும் சுவாசப்பைக் கோளாறும் அதிகம். இரண்டு வருஷம் இழுக்கும் ரிக்ஷாக் கூலிகள் இறக்கும் வரை எந்த வேலையும் செய்ய முடியாதவர்களாக ஆகிவிடுவார்கள். பாரம் சுமப்பவர்கள் அந்த விதமாக ஆவதற்கு மூன்று வருஷங்கள் ஆகும். தலையில் கனமான பாரத்தை எடுத்துக் கட்டிக்கொண்டு நடப்பதால் அவர்களுடைய மூளையும் கெட்டுவிடுகின்றது.

### உணவுப் பங்கீடு

அவர்களுக்கு ஏற்பட்டுள்ள குறைகளில் சர்வ சாதாரணமானது பட்டினியேயாகும். அதைத்தான் அவர்கள் அதிகமாகக் கூறவும் செய்கிறார்கள். அவர்கள் ரொட்டியை மட்டுமே உண்பதால் ஒரு சேர் தான்யங் கொடுத்து வந்ததை முக்கால் சேராகக் குறைத்து விட்டது அவர்களுக்குத் தாங்க முடியாத கஷ்டமாக ஏற்படுகின்றது. அதனாலேயே அநேக தொழிலாளர்கள் முஸோரியிலிருந்து வெளியேறி விட்டார்களாம்.

### வைத்திய வசதி

ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரியும் இரண்டு தர்ம வைத்திய சாலைகளும் உள. தர்ம வைத்தியசாலைகள் நல்ல சேவை செய்து வருகின்றன. ஆனால் ஏழைமக்கள் ஏராளமாக இருப்பதால் அவற்றில் கிடைக்கும் வசதிகள் போதா. அத்துடன் அவர்கள் ஆஸ்பத்திரி திறந்திருக்கும் நேரங்களில் வர முடியாதவர்களாயுமிருக்கிறார்கள். அதனால் வைத்திய வசதி செய்வதானால் அவர்கள் சேரியிலேயே செய்யப்படவேண்டும்.

### பொருளாதார நிலைமை

சுற்றியுள்ள குன்றுகளில் அதிகமாகப் பயிர்கள் உண்டாவதில்லை. அதனால்தான் ஏழை மக்கள் ஏராளமாக முஸோரிக்கு வந்து சேருகிறார்கள். அங்கு வந்ததும் ஆரம்பச் செலவுகளுக்காகக் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. அதனால் ஆரம்பத்திலிருந்தே கடன் கொடுப்பவர்களின். இரும்புப் பிடியில் அகப்பட்டுக் கொள்ளுகிறார்கள். ஆதலால் இத்தகைய ஏழை மக்கள் புதிதாக முஸோரிக்கு வந்ததும் அவர்களுக்கு உதவி செய்வதற்காக ஏதேனும் சகாய ஸ்தாபனங்கள் ஏற்படுத்துவது அவசியமாகும்.

அவர்களுக்கு அதிகமாக வேலைகிடைக்கும் காலங்களில் மாதம் 60 ரூபாயும், வேலை அதிகயாகக் கிடையாத காலங்களில் மாதம் 25 ரூபாயுமே கிடைக்கின்றன. அதனால் சராசரி மாத வருமானத்தை 40 ரூபாய் என்றும் சராசரி மாதச் செலவை 30 ரூபாய் என்றும் வைத்துக் கொள்ளலாம். அவர்கள் கோடை காலத்தில் கிடைப்பதில் 50 ரூபாய் மிச்சப் படுத்தி வைத்துக் கொண்டு குளிர்காலத்தை ஒருவிதமாகக் காலந்தள்ளி விடுகிறார்கள். குளிர்காலத்தில் அவர்களுடைய குடும்பத்தார் வேலையில்லாமல் குந்தியிருக்கிறார்கள். விவசாயத்திலும் அவர்களுக்குக் கிடைப்பது வெகு சொற்பமேயாகும். போதாக் குறைக்கு போலீஸ்காரருக்கு லஞ்சம் கொடுப்பதும் சேர்ந்துகொள்கின்றது. இதைப் பற்றிய முறையீடுகள் என்னிடம் பலர் கூறினார்கள். தொழிலாளர் சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் இத்தகைய குறைகளை விசாரித்து வேண்டுவன செய்யவேண்டும். இந்த ஏழை மக்கள் ஏதேனும் முஸோரியில் வாங்கிக் கொண்டுத் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிப் போகும்பொழுது டெஹ்ரி சமஸ்தானத்துச் சுங்கச் சாவடி உத்யோகஸ்தர்களும் அவர்களிடம் அநியாயமாகப் பணத்தைக் கறந்துவிடுவதாகவும் கூறப்படுகிறது.

ரிக்ஷாக்களின் சொந்தக்காரருக்கும் அதிகமாகக் கொடுக்கவேண்டி யிருக்கிறது. அவர்கள் இழுப்போர்க்குக் கிடைக்கும் வருமானத்தில் 32 சதமானம் வாங்கிக் கொள்ளுகிறார்கள். ரயில்வேயிலும் பிற கம்பெனிகளிலும் வேலை செய்யும் கூலிகளிடமிருந்து அங்குள்ள உத்யோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதால் அந்தக் கூலிகளும் அதிகமாகக் கஷ்டப் படுகிறார்கள்.

**சில யோசனைகள்**

(1) முனிசிபல் சபையார் சர்க்காரிடம் உதவி பெற்றோ பெறாமலோ கூலிகளுக்காகச் சுகாதார வசதிகளுள்ள கக்கூசுகளும் ஸ்நான அறைகளுள்ள நல்ல வீடுகளும் கட்டித் தரவேண்டும். முனிசிபாலிட்டியாரிடம் போதுமான பண மில்லாவிட்டால் முஸோரியில் அதிகமாக வேடிக்கை விநோதங்கள் நடைபெறுவதால் விநோதவரியைக் கூட்டலாம். பரோபகார சிந்தையுடைய பணக்காரர்களும் வீடுகள் கட்டி நியாயமான வாடகைக்கு விடலாம்.

(2) தொழிலாளர்களைச் சங்கமாகச் சேர்த்து அவர்களுக்குக் கூட்டுறவு, சுகாதாரம் போன்ற விஷயங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும். தக்ளியில் நூற்பதையும் உரோமத்தை நூற்பதையும் கற்றுக் கொடுக்கலாம். ரிக்ஷாக்காரர்கள் பகலில் வெகு நேரம் சும்மாயிருந்து வருகிறார்கள். உரோமத்தை வாங்கி நூலாக்கி நெய்து விற்பதைக் கூட்டுறவு முறையில் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

(3) தொழிலாளர்களைச் சங்கமாகச் சேர்த்தால் தொழில் நேரத்தைக் குறைக்கவும் கம்பெனிகளில் நடக்கும் கொடுமைகளை விலக்கவும் முடியும்.

(4) ரிக்ஷாக் கூலிக்கு, சொந்தக்காரருக்குக் கொடுத்தது போக மணிக்கு நாலேகாலணா விதமே கிடைப்பது மிகவும் குறைந்ததாகும். இந்த விகிதங்களை அதிகரிக்க வேண்டும். மற்றத் தொழிலாளருக்கும் இந்த விகிதப்படியே கிடைப்பதாகக் கூறலாம். ஆனால் இந்தத் தொழிலைப்போல அவைகள் எல்லாம் மனிதனை இரண்டு மூன்று வருஷ காலத்தில் எதற்கும் லாயக்கில்லாதவனாகச் செய்து விடுவதில்லை.

ɔ) கோடை காலத்தில், தண்ணீரைச் சிக்கனப்படுத்துவதற்காக முனிசிபல் சபையார் தண்ணீர்க் குழாய்களைத் தினந்தோறும் சில மணி நேரம் தண்ணீர் வரவொட்டாமல் செய்வதானால் ஊரில் பல இடங்களிலும் தண்ணீர்ப்பந்தல்கள் ஏற்படுத்த வேண்டும். அத்துடன் மழை காலத்தில் பெய்யும் ஜலத்தைப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டால் எப்பொழுதும் தண்ணீர் கிடைத்துக் கொண்டிருக்கும்படி செய்ய முடியும் என்பதில் சந்தேகமில்லை.

(6) ரிக்ஷாக்களை நிறுத்திவைக்கு மிடத்தில் வெயிலுக்கும் மழைக்கும் தங்குவதற்காக கூரைபோட வேண்டும்.

(7) வைத்திய வசதியும் சரியான முறையில் அமைத்துத் தரவேண்டும்.

இதுபோல் இன்னும் எத்தனையோ சீர்திருத்தங்கள் செய்யலாம். எது எது செய்யலாம் என்பதை யோசனை செய்து பார்த்தால் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

தேவ் பிரகாஷ்

## ஹரிஜன நிதி

கேள்வி :—தாங்கள் போகுமிடங்களி லெல்லாம் ஹரிஜனங்களுக்காகப் பணம் வசூல் செய்கிறீர்கள். சில சமயங்களில் பெருந்தொகைகள் பெறுவதாகவும் பத்திரிகைகளில் படிக்கின்றேன். இதுவரை வசூல் செய்த பணம் மொத்தம் எவ்வளவு? அது எந்த விதமாகச் செலவு செய்யப்படுகிறது? யாராவது கணக்குகளைப் பரிசீலனை செய்யவோ தணிக்கை செய்யவோ செய்கிறார்களா? நிதியைத் தவறாக உபயோகிப்பதாக நான் கூற வரவில்லை. ஆனால் ஜனங்களுக்கு இந்த விஷயங்களைப்பற்றி ஒன்றும் சொல்லாமலிருப்பது தங்களுக்கு அழகன்று.

பதில் :—இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியதேயில்லை. ஆனால் இந்த நிருபரைப்போல விஷயம் தெரியாதவர்கள் எத்தனையோ பேர் இருப்பார்கள். கேள்வி என்னவோ நியாயமானதுதான். அதற்குப் பதிலும் சுலபமாகக் கூறிவிடலாம். ஹரிஜன நிதிக்காக நான் வசூல் செய்யும் பணங்களை எல்லாம் ஹரிஜன சேவா சங்கத்திடம் சேர்த்துவிடுகின்றேன். திரு. தாக்கர்பாபா தான் அந்த நிதியைப் பரிபாலிப்பவர். அது ஹரிஜன சேவா சங்கம் கூறுகிறபடியும் அதன் அநுமதி பெற்றுமே செலவு செய்யப் பெறுகின்றது. அதில் ஒரு பாகம் மட்டும் என் சொற்படி செலவு செய்யப்படுகின்றது. அப்படிச் செலவாகும் பணம் ஹரிஜனங்களுக்குச் சேவை செய்வதற்காகவே தரப்பட்டதாகும். இதுபோலவே மற்ற நிதிகளுக்காகத் தரப்படும் நன்கொடைகள் என் இஷ்டப்படி செலவு செய்யும்படி அனுப்பப்படுகின்றன. ஒரு பைசா விடாமல் சரியாகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வரவு செலவு கணக்குகள் எல்லாம் அடிக்கடி தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன.

புது டில்லி, மோ. க. காந்தி.
25—6—'46.

[ஹரிஜன பந்துவிலிருந்து]

## இந்த வெறுப்பு ஏன்?

கேள்வி :—விஷயமறியாத ஜைனர்கள் உங்களை ஒரு ஜைனராகவே கருதுகிறார்கள். தாங்களும் அவ்விதமாகக் கருதப்படுவதற்கு வெட்கப்படவுமில்லை. அப்படியிருந்தும் தாங்கள் ஹரிஜனப் பத்திரிகையில் மகாவீருடைய பெயரைக்கூட கூறாமலிருப்பதற்கு வெகு ஜாக்கிரதையாக நடந்து கொள்வதுபோல் தோன்றுகிறது. தங்களைப் போன்ற மகாத்மாவுக்கு இது அழகாகுமா?

பதில் :—ஒரு நிருபருடைய கேள்வியை நான் சுருக்கியிருக்கிறேன். இந்தச் சுருக்கத்திலிருந்தே அவருடைய கடிதத்தின் வாசகம் எப்படி யிருக்கும் என்று வாசகர்கள் ஊகித்துக் கொள்ளலாம். நான் ஜைனன் இல்லை என்ற குற்றத்தை ஏற்றுக்கொள்கின்றேன். ஆயினும் ஜைனர்கள் என்று கூறிக் கொள்கிறவர்களில் பலரைவிடக்கூட நான் மகாவீருடைய உபதேசங்களை அதிகமாயறிந்த பக்தன் என்று கூறுவேன். அப்படியே நான் மகாவீருடைய அடியானாக இல்லாதிருந்தாலும் அதனால் அவருக்கோ அவருடைய அடியார்களுக்கோ எவ்வித நஷ்டமும் உண்டாகப் போவதில்லை. நஷ்டம் உண்டானால் எனக்குத்தான் நஷ்டம். நாம் வணங்கிப் போற்றுபவர்களைப்பற்றி நம் பக்கத்திலிருப்பவர்கள் அலட்சியமாக இருந்தால் அதற்காக வருந்துவதோ கோபிப்பதோ நம்முடைய பலவீனத்தையே காட்டும்.

புதுடில்லி, மோ. க. காந்தி
25—6—46

[ஹரிஜன பந்துவிலிருந்து]

---

தமிழ் ஹரிஜன் உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்துவிடுவதே அதற்குச் சுலபமான வழி.

வருஷ சந்தா தபால் செலவு உள்பட ரூ. 7 0 0
ஆறுமாத சந்தா „ „ ரூ. 3 8 0

தமிழ் ஹரிஜன்,
தியாகராயநகர் :: சென்னை.

அச்சடித்தவர்: பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி.டி., சென்னை.
பிரசுரித்தவர்: ஸ்ரீராமன், தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை. நிர்வாக ஆசிரியர்: சின்ன அண்ணாமலை.